தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 28-1-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண்மை பல்கலைக்கழகம் பெட்ரோலியம் சேமிப்பு ஆராய்ச்சி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் விவசாயிகளை முன்னிலைப்படுத்தி அவர்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு பணிகளை செய்து வருகிறது. விவசாய பயிற்சிகள், விழிப்புணர்வு முகாம்கள், உழவர் தினவிழா போன்ற பல்வேறு விரிவாக்கம் சார்ந்த நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

பெட்ரோலியம் சேமிப்பு ஆராய்ச்சி நிறுவனம் போக்குவரத்து தொழிற்சாலை மற்றும் வேளாண்மை முதலிய துறைகளில் எரிபொருள் சிக்கனம் குறித்த விழிப்புணர்ச்சியினை மேற்கொண்டு வருகிறது. தொழில் நுட்ப உதவி, பயிற்சி முகாம்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது.

பல்கலைக்கழக துணைவேந்தர் முன்னிலையில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் மற்றும் பெட்ரோலியம் சேமிப்பு ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், இரு நிறுவனங்களும் இணைந்து விவசாயத்தில் எரிபொருள் சிக்கனம் குறித்த பல்வேறு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த உள்ளன. வேளாண் கருத்தரங்குகள், விவசாய விழாக்களில் உழவர்களுக்கு எரிபொருள் சிக்கனம் குறித்து பயிற்றுவிக்கப்படும். இந்நிகழச்சிகள் மூலமாக வேளாண்மையில் எரிபொருள் பயன்பாடு குறைவதால் செலவு குறைகிறது. இது விவசாயத்தில் வருவாயை அதிகரிக்க ஏதுவாக அமையும். மேலும் எரிபொருள் குறைபாடு, பசுமைக் கூடார வாயுக்களின் வெளிப்பாட்டினைக் குறைப்பதால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்